# பாட்டாளி மக்கள் கட்சி

பாட்டாளி மக்கள் கட்சியின் **01-09-2025** தேடுயிட்ட ஒழுங்கு நடவடிக்கை குழு பரிந்துரையின் அடிப்படையில் கட்சியின் தலைமையால் எடுக்கப்பட்ட முமவு. பாட்டாளி மக்கள் கட்சியின் பல்வேறு கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட மருத்துவர் இரா.அன்புமணி அவர்கள் மீதுஒழுங்கு நடவடிக்கை குழு அனுப்பிவைத்த **16** குற்றச்சாட்டுகளுக்கும் **(19-08-2025** தேதியிட்ட) எந்தவித பதிலும் அளிக்காமல் அவகாசங்கள் இரு முறை கொடுத்தும் பதில் ஏதும் எழுத்துப்பூர்வமாக கொடுக்காமலும் அல்லது நேரில் வந்து ஆஜராகாமலும் இருந்துள்ள செயல் அவர் மீது சொல்லப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும் அவர் எந்த வித பதிலும் அளிக்க அவர் தரப்பில் எந்த நியாயமும் இல்லை என்பதால்தான் அந்த **16** குற்றச்சாட்டுகளுக்கு எந்த வித விளக்கமும் பதிலும் அளிக்காமல் இருந்துள்ளது அவர் அனைத்து குற்றசாட்டுகளையும் தான் செய்த தவறுகள் என்று ஒப்புக் கொண்டுள்ளார் என்றேஅனுமானம் இருப்பதாலும் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அனைத்து குற்றச்சாட்டுகளும் உண்மையானவையே மற்றும் சரியானவையே என்று முடிவு செய்யப்படுகிறது . அதனால் கட்சியின் நற்பெயருக்கும் கட்சியின் வளர்ச்சிக்கும் மேற்படி மருத்துவர் இரா.அன்பமணி அவருடைய செயல்கள் கட்சி ஆரம்பித்தது முதல் இதுநாள்வரை எவரும் செய்யாத ஒரு மிக மோசமான மற்றும் தலைமைக்கு கட்டுப்படாத தான்தோன்றித்தனமான செயல் மட்டுமன்றி ஒரு அரசியல்வாதி என்ற தகுதியற்றவராகவே தன்னை அவர் நிரூபித்துள்ளார். ஆகையினால் பாட்டாளி மக்கள் கட்சியின் அனைத்து தரப்பு நிர்வாகிகள்**,** தலைவர்கள், உறுப்பினர்களின் மனம் புண்படும் படியாக நடந்துள்ள இந்த செயல் கட்சியை அழிக்க முயற்சிக்கும் ஒரு முயற்சி என்பது தெரிய வருவதால் கட்சி விரோத போக்கு மற்றும் நடவடிக்கை என்று முடிவு செய்து மேற்படி மருத்துவர் இரா.அன்புமணி அவர்களை பாட்டாளி மக்கள் கட்சியின் செயல் தலைவர் பதவியில் இருந்து நீக்குவது என்று முடிவு செய்து நீக்கப்படுகிறார். மேலும் கட்சியின் எதிர்கால வளர்ச்சிக்கு அவருடைய நடவடிக்கை மற்றும் போக்கு மிகப்பெரிய குந்தகம் விளைவிக்கும் செயலாக உள்ளதால் பாட்டாளி மக்கள் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து அவரை உடனடியாக நீக்குவது என்று முடிவு செய்து கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து இந்த நிமிடம் முதல் நீக்கப்படுகிறார். பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்தவர்கள் அவருடன் எந்த தொடர்பும் கட்சி சார்பாக வைத்துக் கொள்ளக் கூடாது என்றும் அப்படி மீறி வைத்துக் கொண்டால் அவர்கள் மீதும் கட்சி விரோத நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெளிவுபடுத்தி இந்த முடிவு எடுக்கப்படுகிறது.

இந்த முடிவை கட்சியினரும் பொதுமக்களும் அறிந்து கொள்ளும் மற்றும் தெரிந்து கொள்ளும் வகையில் அனைத்து ஊடகங்களுக்கும் கொடுத்து விளம்பரப்படுத்த வேண்டும் என்றும் இப்படி கட்சி விரோத நடவடிக்கையில் பிற்காலத்தில் எவரேனும் ஈடுபட்டால் இதுபோன்ற கடுமையான நடவடிக்கைகளை கட்சி எடுக்கத் தயங்காது என்பதை தெரியப்படுத்தவும் கட்சியின் வளர்ச்சி மட்டுமே முக்கியமானது என்பதை கருத்தில் கொண்டு செயல் தலைவர் பதவியில் இருந்துஅவரை நீக்குவது என்று முடிவு செய்து நீக்கப்படுகிறார். இந்த முடிவு கட்சியின் அமைப்பு விதிகள் சொல்லும் ஜனநாயக முறைப்படி பல கட்ட விசாரணைக்கு பிறகு நிறைய வாய்ப்புகள் கொடுத்து எடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவர் ச.இராமதாசு
நிறுவனர் - தலைவர்
பாட்டாளி மக்கள் கட்சி
**11-09-2025**